உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

மலர் 2.] நள௵ ஆனி௴ 1916௵ ஜூன்௴ [இதழ் 6

*வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்து*
*இணங்கத்தன் சீரடியார் கூட்டமும்வைத் தெம்பெருமான்*
*அணங்கொ டணிதில்லை யம்பலத்தே யாடுகின்ற*
*குணங்கூறப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ.*

---

## சென்னைச் சிவனடியார்திருக்கூட்டத்தின்

## *சிறந்தவிண்ணப்பம்.*

**இதுசைவாபிமானசீலர்கள் ஒவ்வொருவராலும்**
**அத்தியாவசியமாய்க் கவனிக்கற்பாலது.**

*இச்சபை அரசாங்கத்தினால் ரிஜிஸ்டர் செய்யப்பெற்றிருப்பதும், 18 வருடங்களாக ஒழுங்காய் நடைபெற்றுவருவதும், அனேக சிவதலங் கட்கு யாத்திரைசெய்து சிவாலயவழிபாடு சைவப்பிரசங்கமுதலியன செய்ததும், சென்னையில் சுமார் 3000 ரூபாவரையில் செலவிட்டுச் சபாமண்டபங் கட்டிவைத்துக்கொண்டு அதில் புத்தகசாலைவைத்து, சைவப்பிரசங்கம் தமிழ்வேத பாராயணமுதலியன செய்துகொண்டிருப் பதும், திருமுறைத்திரட்டுமுதலிய நூல்களை வெளியிட்டு மிகவுங்குறை ந்த விலைக்கு விற்றதும், இப்போது ஆங்கில பாடசாலைவைத்து அதில் சிறுவர்களுக்கு அரசாங்கச் சட்டங்களை யநுசரித்து ஆங்கிலம் தமிழ் இவற்றோடு சைவசமயபாடங்களையுங் கற்பித்துச் சிவாலயவழிபாடு செய்விப்பதும், "சைவம்" என்னும் இப்பத்திரிகையை வெளியிட்டு மிகவுங் குறைந்தசந்தாவிற்குக் கொடுத்து வருவதும், கிராமப்படி நிர்வாக சபைகளும் மகாஜனசபைகளுங் கூட்டி வருடந்தோறும் தவறாமல் வரவு*

செலவு கணக்கும் சபாக்கிரந்தமும் அச்சிட்டு வெளியிடுவதும், இச் சபையார் இதுகாறும் வெளியிட்ட சபாக்கிரந்தங்களாலும், சைவம் என்னும் இப்பத்திரிகையாலும் யாவருக்கும் வெள்ளிடைமலைபோல் விளங்கித்தோன்றும்.

இத்தகைய சபைகளைக் கிறிஸ்தவர்கள் தங்கள் உயிர்த்துணையாக எண்ணி ஆதரிப்பதனால், கிறிஸ்துசபைகள் உலகெங்கும் அபிவிருத்தி யெய்தி, எண்ணிறந்த பாடசாலைகள் வைத்துக் கிறிஸ்து சமயபோதனை செய்கின்றன. கிறிஸ்து சமய நூல்கள் வெளியிட்டு, நாம் இரண்டு ரூபாவுக்கு விற்கும் புத்தகங்களை இரண்டணாவுக்குக் கொடுக்கின்றன. சைவ சமயிகள் சுயநலங்கருதாமல் பொதுநலமொன்றையே விழைந்து சைவ சமய பரிபாலனஞ் செய்தற்கென சபைகள்வைத்து நடத்துவது அருமை. யாரேனும் சைவாபிமானிகள் துணிந்து முன்வந்து நடத்தப்புகுந்தாலும், சைவசமயிகள் சிலர் போலிச் சபைகளை வைத்துக்கொண்டு உலகோரை வஞ்சிப்பதனால், உண்மைச் சபைகளை யாதரிப்பாருமில்லை. இதனால் நமது சமயம் நாளுக்குநாள் சீரணமடைந்துகொண்டேவருகிறது. கிறிஸ்தவர்களுள்ளும் ஊரை வஞ்சிக்கும் போலிச்சபைகள் இல்லாமற்போகா. ஆயினும், அவர்களுள் தங்கள் சமய வளர்ச்சியின்பொருட்டு உண்மையாயுழைக்கும் சபைகள் எண்ணிறந்தனவாயிருக்கின்றன. கிறிஸ்தவர்கள் தங்கள் திரவியங்களை அவைகளுக்கு அர்ப்பணஞ் செய்துவிடுகிறார்கள். சந்ததியில்லாதவர்கள் தங்கள் திரவியங்களை அச்சபைகளிடம் சேர்த்துவிடுகிறார்கள். நம்மவர்கள் அவர்களைப்போல் சபைகளை வைத்துச் சமயபரிபாலனம் பண்ணும் வழக்கமில்லாமையால் சபைகளுக்குப் பொருளுதவிசெய்வதும் கடினமாயிருக்கிறது. கிறிஸ்து சமயத்திற்கு அரசாங்க பலமிருக்கிறது. கிறிஸ்து ஜனங்களும் உண்மையாய் ஒத்து உழைக்கின்றார்கள். நமக்குச் சைவ அரசர் துணையே இல்லை. நம்முடைய சனங்களும் ஒத்து உழைக்கிறதில்லை. ஒத்து உழைத்தாலும் உதவிசெய்வாரில்லை. நம்முடைய நிலைமையிவ்வாறிருந்தும், சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தார் சைவசமயத்திற்கு நல்லகாலம் உண்டாகுமென்று எதிர்பார்த்துக்கொண்டு "கொடிறும் பேதையும் கொண்டது விடாது" என்னும் பழமொழியின்படி இடையறாத ஊக்கத்தோடு தங்கள் சபையை வருடத்திற்கு வருடம் மேலுமேலும் அபிவிருத்திசெய்து கொண்டு வருகிறார்கள்.

இச்சபையார் இப்போது செய்துவரும் வேலைகளுள் மிகவும் சிறந்தவை யிரண்டு. அவை பாடசாலைவைத்திருத்தலும் பத்திரிகை வெளியிடுதலுமாம். இவையிரண்டும் அபிவிருத்தியடைவதற்கு அச்சுக்கூடம்

அத்தியாவசியமாய்வேண்டும். கிறிஸ்து சபைகள் பல அச்சுக்கூடங்களை வைத்துக்கொண்டே உலகுக்குப் பேருபகாரங்களைச் செய்கின்றன. அன்றியும், அயலவர் வைத்திருக்கும் அச்சுக்கூடங்களில் பத்திரிகை வெளியிடுவதனால் பலவிதமான கஷ்டநஷ்டங்களுண்டாகின்றன. ஆதலால் பத்திராதிபர்கள் பலர் சொந்தமாக அச்சுக்கூடம் வைத்துக்கொள்ளுகிறார்கள். இச்சபைக்கென ஒரு அச்சுக்கூடமிருந்தால் நமது பத்திரிகை பலவிதத்திலும் அபிவிருத்தியடைந்து உலகை உவப்பச்செய்யும். அன்றியும், அது "ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்—பேரறி வாளன் திரு" என்னுந் திருக்குறளின்படி, இச்சபைக்கேயன்றி, பொதுவாய் சைவசமயத்திற்கே ஒரு அரணாகவு மிருக்கும்.

இப்போதைக்கு வேண்டிய அளவாக ஒரு அச்சுக்கூடம் வைப்பதற்குச் சுமார் 2500 ரூபா வேண்டும். 250 சைவத்திருவாளர்கள் சைவநலங்கருதி அன்புகூர்ந்து முன்வந்து நமது பத்திரிகைக்கு ஆயுள் சந்தாதாரர்களாகச்சேர்ந்து ஒவ்வொருவரும் மொத்தமாக பத்து ரூபா கொடுத்து உதவிபுரிந்தால் இத்தொகை மிகவும் இலேசாய்ச் சேர்ந்துவிடும். இவர்களுக்கு ஆயுள்வரையில் பத்திரிகை அனுப்பப்படுவதன்றி, இவர்கள் இம்மையிலும் அம்மையிலும் இவ்வரிய பதிபுண்ணியப் பிரதிஷ்டைக்குக் காரணகர்த்தர்களாகவும் எண்ணி எத்தப்பெறுவர். ஆயுள் சந்தா செலுத்த இயலாதவர்கள் பிறரை ஆயுள் சந்தாதாரர்களாகச்சேர்த்துபகரித்தலும், கூடுமானவர்கள் தங்கள் ஆயுள் சந்தாமாத்திரமன்றி இன்னும் கூடுமானபொருளுதவி செய்தலும் உத்தமோத்தமமாகும். இவ்வாறு உபகரிக்க முன்வரும் பெரியோர்கள் அன்புகூர்ந்து தங்கள் விருப்பத்தை உடனே தெரிவிக்கப் பிரார்த்திக்கின்றோம். நூறுகையொப்பஞ் சேர்ந்தபிறகே பொருள்சேகரித்து உடனே அச்சுக்கூடம் வைக்கப்படும். ஆயுள் சந்தாதாரர்கள் பெயர் முதலியன சந்தாபெற்றுக்கொண்டவுடன் இப்பத்திரிகைவாயிலாக வெளியிடப்பெறுவதன்றி, அச்சுக்கூடத்தின் வரவு செலவு கணக்கும் வருடாந்தச் சபாக்கிரந்தங்களோடு வெளியிடப்படும்.

சிவநேயச் செல்வர்களே, இச்சமயத்தில் ஒவ்வொருவரும் சிரமம் பாராது அன்புடன் முன்வந்து கைகொடுத்தேற்றுங்கள்.

இங்ஙனம்

சைவந்தழைத்தோங்கவேண்டிச் சிவநேயர்களின்
திருவருளை யெதிர்பார்க்கும் காரியதரிசி
இ. ஆதிமூலமுதலியார்.

# சிவனடியார்பூசை.

(82-வது பக்கத்தொடர்ச்சி.)

## சிவஞானபோதம்.

தன்னுணர வேண்டித் தனதுருவைத் தான்கொடுத்துத்
தன்னுணரத் தன்னு ளிருத்தலாற்—றன்னுணரு
நேசத்தர் தம்பா ணிகழுந் ததிநெய்போற்
பாசத்தார்க் கின்றாம் பதி.

(இ-ள்.) உரையுணர்வுக்கெட்டாத பரம்பொருள் உயிர்கள் தன்னை யறிந்து உய்தற்பொருட்டு, திருநீறு கண்டிகை முதலிய திருவேடமாகிய தனது திருமேனியைத் தன் அன்பர்க்குக் கொடுத்தலாலும், அவ்வன்பர் தன்னைச் சிவோகம் பாவனையால் அறியச்செய்தலாலும், அவ்வாறு ஒரு குறியின்கண் நின்றுணரும் அவரைத் தன் வியாபகத்துக்குள்ளாக இருத்துதலாலும், குறியும் இறந்து நின்று தன்னை உள்ளவாறு உணரும் அவ்வன்பரிடத்து தயிரினிடத்திலுள்ள நெய்போல் விளங்கித்தோன்றும். அவ்வியல்பில்லாத பாசக்கட்டுடையாரிடத்தில் பாலினிடத்திலுள்ள நெய்போல் விளங்காது நிற்கும் (எ-று.)

சிவபத்தர்களைச் சிவனெனவே கண்டுவழிபடுதற்கு அவர்களிடத்திற் காணப்படும் வேடம்முதலிய நான்கினுள் ஒன்றேயமையும் என்பது மெய்ப்பொருள் நாயனார் முதலிய உண்மை நாயன்மார்கள் தம்மைக் கொல்ல வந்தவர்களையும் அவர்களிடத்திற்கண்ட சிவவேடத்தாற் சிவமெனக்கருதி வழிபட்டுய்ந்த திவ்விய சரித்திரங்களால் இனிது விளங்கும்.

## திருத்தாண்டகம்.

எவரேனுந் தாமாக விலாடத் திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி
யுவராதே யவரவரைக் கண்ட போது
உகந்தடிமைத் திறநினைந்தங் குவந்து நோக்கி
யிவர்தேவ ரவர்தேவ ரென்று சொல்லி
யிரண்டாட்டா தொழிந்தீசன் றிறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே.

சிவபூசைசெய்பவர் சிவபெருமானைமாத்திரம் பூசிப்பவராவர். சிவனடியார் பூசைசெய்பவர் சிவனடியாரை மாத்திரமன்றி அவர்களை வேறற அதிட்டித்துநின்றருளும் சிவபெருமானையும் பூசிப்பவராவர். ஆதலால் சிவனடியார்பூசை சிவபூசையினுஞ் சிரேட்டமென நூல்கள் கூறாநிற்கும்.

## திருமந்திரம்.

படமாடக் கோயிற் பகவற்கொன் றீயி
னடமாடக் கோயி னம்பர்க்கங் காகா
நடமாடக் கோயி னம்பர்க்கொன் றீயிற்
படமாடக் கோயிற் பகவற்க தாமே.

சரியையாளரினும் கிரியையாளர் சிவசாந்நித்தியம் மிக்குடையவர்கள். சிவயோகிகள் சிவசாந்நித்தியம் நிரம்பப்பெற்றிருப்பவர்கள். சிவஞானிகள் சிவமேயாய் விளங்குபவர்கள். ஆதலால் இவர்களுக்குச் செய்யும் பூசைகளும் ஒன்றினொன்று அதிக பலனைத்தரும்.

அரிபிரமாதி தேவர்களாலும் வேதங்களாலும் மனம் வாக்குக்காயங்களாலும் அறியப்படாத அதீதப்பொருளாயிருக்கும் சிவபெருமான் சிவனடியார்களின் அன்பின்வசப்பட்டு அவர்கள் உள்ளத்தையே கோயிலாய்க்கொண்டு வீற்றிருப்பதுமன்றி அவர்கள் விரும்பிய ஏவலையுஞ் செய்து மகிழ்வாரெனில், சிவனடியார்பெருமைகளை யாவர் அளவிட்டுரைக்கற்பாலர்!.

## திருவாரூர் நான்மணிமாலை.

### நேரிசையாசிரியப்பா.

* * * * * *

மாமுகி றவழு மணிமதிற் கமலைப்
பெம்மா னருமைப் பெருமா னாயினு
மூனுண் வாழ்க்கைக் கானவர் குரிசில்
செஞ்சிலை சுமந்த கருமுகி லேய்ப்ப
வுண்டுமிழ் தீநீ ருவந்தன ராடியும்
விருப்படிக் கொண்ட மிச்சிலூண் மிசைந்துஞ்
செருப்படிக் கடிகள் செம்மாந் திருந்துந்
தொல்புகழ் விசயன் வில்லடி பொறுத்து
மருந்தமிழ் வழுதி பிரம்படிக் குவந்து
நள்ளிருள் யாமத்து நாவலர் பெருமான்
றள்ளாக் காத றணித்தற் கம்ம
பரவை வாய்தலிற் பதமலர் சேப்ப
வொருகா லல்ல விருகா னடந்து
மெளியரி னெளிய ராயின
ரளியர் போலு மன்பர்க டமக்கே.

நிருவாணதீக்ஷிதர், விசேஷதீக்ஷிதர், சமயதீக்ஷிதர் என்னும் முத்திறத்தினரும் சிவனடியார்களென வழிபடற்குரியாராவர். சமயதீக்ஷிதர் ஆசாரியரையும், நிருவாணதீக்ஷிதரையும் விசேஷதீக்ஷிதரையும், சமயதீக்ஷிதர்களுள்ளே தம்மின் மூத்தோரையும் வணங்குதற்கு உரியவர். விசேஷதீக்ஷிதர் ஆசாரியரையும் நிருவாணதீக்ஷிதரையும், விசேஷதீக்ஷிதர்களுக்குள்ளே தம்மின் மூத்தோரையும் வணங்குதற்கு உரியவர். நிருவாணதீக்ஷிதர் ஆசாரியரையும், நிருவாணதீக்ஷிதருள்ளே தம்மின் மூத்தோரையும் வணங்குதற்கு உரியவர். ஆசாரியர் ஆசாரியர்களுள்ளே தம்மின் மூத்தோரை வணங்குதற்கு உரியவர்.

வருணாச்சிரமங்களால் தம்மிலுந்தாழ்ந்தவர் தீக்ஷை முதலியவற்றினாலே தம்மின் உயர்ந்தவராயின் அவரை அவமதித்தல் செய்யாமலும், புறத்துவணங்குதல் செய்யாமலும், மனத்தால் வணங்குதல்வேண்டும். அப்படிச்செய்யாது அவமதித்தவர் தப்பாது நரகத்தில்வீழ்வர். சிவஞானிகளேயாயின் அவரை வருணம் ஆச்சிரமம் முதலியவை சற்றுங்குறியாது, எல்லாரும் வணங்கல்வேண்டும். எல்லைகடந்து முருகி வளரும் மெய்யன்பினால் விழுங்கப்பட்ட மனத்தையுடையவர் திருவேடமாத்திரமுடையவரைக் காணினும், வருணம் ஆச்சிரமம் முதலியவற்றை நோக்காமல் உடனே அத்திருவேடத்தால் வசீகரப்பட்டு வணங்குவர்.

ஆசாரியர், நிருவாணதீக்ஷிதர், விசேஷதீக்ஷிதர், சமயதீக்ஷிதர் என்னும் நால்வகை மாகேசுரர்களையும் விதிப்படிபூசித்துத் திருவமுதுசெய்வித்தல் மாகேசுரபூசையென்னப்படும். (மகேசுரனை வழிபடுவோர் மாகேசுரர் எனப்படுவர்). வைதிகப்பிராமணர் ஆயிரம்பேருக்கு அன்னதானஞ் செய்தபலமுஞ் சமயதீக்ஷிதர் ஒருவருக்கு அன்னதானஞ் செய்தபலமும் ஒக்கும். வைதிகப்பிராமணர் பதினாயிரம்பேருக்கு அன்னதானஞ்செய்தபலமும் விசேஷதீக்ஷிதர் ஒருவருக்கு அன்னதானஞ் செய்தபலமும் ஒக்கும். வைதிகப்பிராமணர் கோடிபேருக்கு அன்னதானஞ்செய்தபலமும் சைவாசாரியர் ஒருவருக்கு அன்னதானஞ் செய்தபலமும் ஒக்கும்.

## திருமந்திரம்.

அகர மாயிர மந்தணர்க் கீயிலென்
சிகர மாயிரஞ் செய்து முடிக்கிலென்
பகரு ஞானி பகலூண் பலத்துக்கு
நிகரிலை யென்பது நிச்சயந் தானே.

ஆறிடும் வேள்வி யருமறை நூலவர்
கூறிடு மந்தணர் கோடிபே ருண்பதி
னீறிடுந் தொண்டர் நினைவின் பயனிலை
பேறெனி லோர்பிடி பேறது வாமே.

சிவபூசையைக்காட்டிலும் சிவனடியார்பூசை சிரேட்டமாயிருந்தும், உலகவர் சிவபூசையை விரும்பிச்செய்வதுபோல் சிவனடியார்பூசை செய்வதில்லை. இவர்கள் பூசை நடவாமலும் மூர்த்திகரமில்லாமலும் இருக்கும் சிவலிங்கமுதலியவற்றிற்குப் பூசை திருவிழா முதலியன செய்தாலும் செய்கிறார்கள். சிவபத்தியும் சைவாநுட்டானமுமுடைய சிவனடியார்களைக் கையெடுத்துக் கும்பிடவுங் கூசுகிறார்கள். சிவலிங்க முதலியன எந்நிலையிலிருந்தாலும் அவைகளைச் சிவமாக எண்ணுகிறார்கள். சிவனடியார்கள் எவ்வளவு சிவபத்தியும் சைவாநுட்டானமுமுடையவர்களா யிருந்தாலும் அவர்களைத் தங்களைப்போன்ற மனிதராக எண்ணுகிறார்களே யன்றி, சிவமாக மதிப்பதில்லை. சிவலிங்கமுதலியவற்றின் குணங்களை யாராய்கிறதில்லை. சிவனடியார்களின் குணங்குற்றங்களைமாத்திரம் ஆராய்கிறார்கள். இவர்கள் தங்கள் யோக்கியதையை ஆராய்ந்தடங்வகுதில்லை. சிவனடியார்களின் யோக்கியதையைமட்டும் ஆராய்கிறார்கள். இவர்களுக்குச் சிவனடியாரிடத்திலுள்ள வேடம் செயல் முதலியன தோன்றாது. அவர்களிடத்திலுள்ள குற்றமே முற்பட்டுப் பெரிதாகத் தோன்றும். உலகத்தில் குற்றமில்லாதவர்கள் ஒருவருமில்லை. கடவுள் ஒருவரே குற்றமில்லாதவர்.

## கந்தபுராணம்.

தண்டத் திறையைக் கடந்த தனியாற்றல்
கொண்டுற் றவர்க்கே குறைகண் டிலமேனை
யண்டத் தவர்க்கு மனைவர்க்கு மொவ்வொர்குறை
யுண்டத் தகைமை யெவரு முணர்குவரால்.

உலகத்தில் ஒருவரினொருவர் குணங்குற்றங்களால் உயர்ந்தும் தாழ்ந்தும் இருப்பர். ஆதலால் குற்றங்களை யாராயப்புகின் ஒருவரை நோக்க மற்றொருவர் குற்றமுடையவராய்க் காணப்பட்டு, ஒருவரையும் குற்றமற்ற சிவனடியார் என்று பூசித்தற்கிடமில்லாமற் போம். ஆதலால், பெரியோர்கள் சிவனடியார்களிடத்தில் குற்றம் நோக்காமல் அவர்களுடைய வேடமாத்திரத்திலேயே அவர்களைச் சிவனெனவே வழிபட்டு உய்ந்தார்கள். அவ்வாறு வழிபட்டு உய்யும் புண்ணியமில்லாதவர்களே அவர்களைத் தங்களைப்போன்ற மனிதரென்றெண்ணி குற்றங்களை யாராய்ந்து சிவனடியார் பூசை செய்யாதொழிவர்.

## நன்னெறி.

உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே—வண்டுமலர்ச்
சேக்கை விரும்புஞ் செழும்பொழில்வாய் வேம்பன்றோ
காக்கை விரும்புங் கனி.

சிலர் நாள்முழுவதும் சிவபூசை செய்கிறார்கள். விசேடபொருட் செலவிட்டுக் கோயில்திருப்பணி திருவிழா முதலியன செய்கிறார்கள். அறுபத்துமூன்றுநாயன்மார்களுக்குக் குருபூசைசெய்கிறார்கள். திருத்தொண்டர் புராணத்தை நெட்டுருப்பண்ணுகிறார்கள். இவர்கள் இவ்வளவு சிவதருமங்கள் செய்பவராயிருந்தும், சிவபத்தியுடையவர்களைச் சிறிதும் சட்டைசெய்வதேயில்லை. இவர்கள் தங்கள் சாதி, செல்வம், கல்வி முதலியவற்றையே பெரியனவாக மதித்துச் சிவனடியார்களை அவமதிக்கின்றார்கள். உண்மைச் சிவனடியார்கள் ஏழைகளாயிருந்துகொண்டும் சைவாபிமான மேலீட்டினாலும், சிவபத்தி மேலீட்டினாலும், சிவகைங்கரியஞ் செய்யவிரும்பி இவர்களிடம் பொருளுதவியை நாடிச்சென்றால் இவர்கள் அச்சிவனடியார்களைத் தங்களிடம் வயிறுவளர்க்கப்பிச்சைக்கு வந்தவர்களைப்போல் எண்ணி நடத்துகிறார்கள். இவ்வாறு சிவனடியார்களை யவமதித்துச் சிவலிங்கபூசைமுதலியன செய்வதினால் யாதுபயனுண்டாம்? சென்னையில் சிலநாட்களுக்குமுன் சிவபத்த சிரோமணியொருவர் இருந்தனர். இவர் மிகுந்த கல்வியறிவொழுக்கமுடையவராய் தமது செல்வத்தையெல்லாம் சிவாலயபூசை சீரணோத்தாரணமுதலிய பதிபுண்ணியங்களுக்கே செலவிட்டனர். இவர் தமது வயோதிகத்தில் தமது சீவனத்திற்கும் தாம் சீரணோத்தாரணஞ்செய்த திருக்கோயில் நித்தியபூசைக்கும் உதவுமாறு வைத்திருந்த பொருளெல்லாம் அர்பத்னெட் கம்பெனியாரும் புரசையில் இருந்த ஒருபண்டாரசாரும் செய்த மோசத்தால் இழந்துவிட்டனர். கடைசியாக இவர் தமது மிகுந்த விருத்தாப்பியகாலத்தில் தமது சீவனத்திற்கே கஷ்டப்படும்படி நேரிட்டுவிட்டது; அவ்வாறிருந்தும் அவர் தமது மெய்வருத்தம் நோக்காமல் தினந்தோறும் தள்ளாடித்தள்ளாடி வெகுதூரம் நடந்துசென்று அக்கோயிலையடைந்து உழவாரத்திருப்பணி முதலியன செய்துகொண்டிருந்தனர். இவர் பிறரிடம் பசுவுக்கு ஒருபிடி புல்லும் கொடுக்கும்படி கேட்காத பெருந்தகையாரென்பதைப் பலரும் அறிவார்கள். இவர் தமது சீவனத்திற்கு நேரிட்ட இடையூற்றையும் நோக்காமல், உலோகோபகாரமாகவும் தமது ஆன்மார்த்தமாகவும் தாம் சீரணோத்தாரணஞ் செய்த சிவாலய நித்தியபூசையை இயன்றவரையில் முட்டுப்படாமல் நடத்துவித்தற்கு இவர் பட்டபாடு சொல்லத்தொலையாது. இவரையறிந்தசைவர்கள் பலர் சிவபூசை செய்வதிலும் திருவிழாக்கள் செய்வதிலும், சிவனடியார் பெருமைகளையும் சைவசமய உண்மைகளையும் சண்டப்பிரசண்டமாகப் பிரசங்கஞ்செய்வதிலும், எவ்வளவானாலும் செலவிட்டு மனைவிமக்களைச் சந்தோஷிப்பதிலுமே தங்கள் கவனத்தைச் செலுத்தினார்களேயின்றி, இவர்பொருட்டு இரங்கியேனும் அக்கோயிலுக்கு

உபகரிக்க முன்வரவில்லை. சென்னைவாசியாகிய மற்றொரு சிவனடியார் தமக்குக் கிடைக்கும் அற்பவருமானத்தைக்கொண்டு இல்லறத்தை நடத்திக்கொண்டு, தினந்தோறும் தவறாமல் சிவாலயசேவைசெய்துகொண்டும், மிகவும் கஷ்டப்பட்டு சிவகைங்கரியங்கள் செய்துகொண்டும் இருக்கின்றனர். இவர் பிரதோஷ மகோற்சவகாலத்தில் சிவபெருமானுக்குப் பூமாலைகட்டிச் சாத்துவது வழக்கம். இவர் ஒரு பிரதோஷகாலத்தில் திருவொற்றியூரிலுள்ள ஸ்ரீ தியாகராஜப்பெருமானுர்க்குச் சாத்துமாறு பூமாலைகள்கட்டி திருப்பூக்கூடையில்வைத்து எடுத்துக்கொண்டு சென்னையிலிருந்து சுமார் 4 மைல் தூரத்திலுள்ள திருவொற்றியூருக்குப்போகப் புறப்பட்டனர். அதேசமயத்தில் நாலுபேர் விபூதிருத்திராக்கங்களை அணிந்தவர்களாய் நாற்சக்கரவண்டியிலேறி அத்தலத்திற்குப் போகப் புறப்பட்டார்கள். அவர்களுள் இருவர் பூமாலைகொண்டு சென்ற இச்சிவனடியாரை நன்றாயறிந்தவர்கள். அவர்களைப்பார்த்து இவ்வடியவர் "ஐயன்மீர், அடியேன் திருவொற்றியூரில் பிரதோஷநாயகருக்குச் சாத்தவேண்டி பூமாலைகள் கொண்டுபோகிறேன். இப்போது நெடுநேரமாய் விட்டமையால், அடியேன் நடந்துசென்றால், இம்மாலைகள் உற்சவத்திற்குப் பயன்படாமற் போகக்கூடும். வண்டிவைத்துச் செல்வதற்கும் என்னிடம் இச்சமயம் காசில்லை. தயைசெய்து தங்கள் வண்டியின் பின்பக்கத்தில் (குதிரைச்சேவகன் உட்காருமிடத்தில்) அடியேன் உட்கார்ந்துசெல்ல அனுமதி கொடுக்கவேண்டும்" என்று கெஞ்சிக் கேட்டனர். அவர்கள் அதைக்கேட்டுச் சிறிதும் மனமிரங்காமல் "இந்தக்குதிரை முரட்டுக்குதிரை, ஆள் அதிகமாயேறினால் சண்டித்தனம்பண்ணும்" என்றுசொல்லி வண்டியை ஓட்டிக்கொண்டு சென்றார்கள். இத்தகைய உதாரணங்கள் அளவிறந்தன விருக்கின்றன. இவைகளை யாராயும்போது சிவனடியார்பூசை புத்தகத்திலும் பிரசங்க மேடையிலுமே யன்றி வேறெங்குமில்லையென்று எண்ணவரும்.

சென்னைச் சைவர்கள் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்திற்குச் சென்ற 18 வருடங்களாகச் செய்துவந்த இடையூறுகளை நோக்கினால் சைவர்கள் சிவனடியார்களுக்கு உபத்திரவஞ் செய்யாதிருப்பதே சிறந்த சிவனடியார் பூசையென்று சொல்லவேண்டிவரும். இதுவரையில் கூறியவற்றால் சிவனடியார் பூசையென்பது இக்காலத்தில் அநுட்டானத்திலில்லை யென்பதுபோதரும். பின்வரும் நாயன்மார் சரித்திரங்களால் முற்காலத்திலும் சிவனடியார் பூசை செய்தவர்கள் ஏகதேசமாயிருந்தார்களென்றே தெரிகின்றது.

கணம்புல்லநாயனார் சரித்திரம்—இவர் இருக்குவேளூரில் செல்வத்திலும் சிவபத்தியிலும் சிறந்து வாழ்ந்திருந்தவர். இவர் "விளக்

கிட்டார் பேறுசொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்" என்னும் வேத வசனத்தின்படி சிவஞானத்திற்கேதுவாகிய திருவிளக்கேற்றும் திருப்பணியை மேற்கொண்டு சிவாலயங்களில் நெடுங்காலமாகத் தமது ஆசைதீர திருவிளக்கேற்றிக்கொண்டிருந்தனர். இவர் திருவிளக்கேற்றி வந்த ஆலயங்கள் மிகவும் பொலிந்து தோன்றுதலும் சனங்கள் அவ்வாலயங்களுக்கு மிகுந்தகளிப்போடுஞ் சென்று சிவதரிசனஞ் செய்துகொண்டிருந்தார்கள். நெடுங்காலஞ் சென்றபின், நினைந்துருகு மடியாரை நையவைக்கும் இறைவாருள் இவ்வன்பரிடத்தில் மேலிடுதலும், அதைக்கண்டு அஞ்சி நீங்கியதையொப்ப, அறிவினரை மயக்கும் பொருட்செல்வமுற்றிலும் இவரை விட்டகன்றது. இவர் மிகவும் வறுமையெய்தி, சிதம்பரத்தை அடைந்து, சபாநாயகரைத் தரிசனஞ் செய்துகொண்டு, தம்முடைய வீட்டிலுள்ள பொருள்களைவிற்று, அங்குள்ள திருப்புலீச்சரம் என்னும் ஆலயத்திலே திருவிளக்கேற்றி வந்தார். இப்படி யொழுகுநாளிலே, வீட்டுப்பொருள்களும் ஒழிந்துவிட, கணம்புல்லுக்களை அரிந்துகொண்டுவந்து விற்று நெய்வாங்கித் திருவிளக்கெரித்தார். அதனால் இவருக்குக் கணம்புல்லநாயனார் என்னும் பெயர் உண்டாயிற்று. ஒருநாள் தாம் அரிந்துகொண்டுவந்த புல்லு விலைப்படாதொழியவும், தம்முடைய பணிதவறாமல் அப்புல்லையே மாட்டி விளக்கெரித்தார். முன்பு விளக்கெரிக்கும் யாமம் வரையும் எரித்தற்கு அப்புல்லுப்போதாமையால், அடுத்தவிளக்கிலே என்பும் உருகும்படித் தமது திருமுடியை எரித்தார். அப்பொழுது சிவபெருமான் பெருங்கருணைசெய்தலும் கணம்புல்லநாயனார் சிவலோகமடைந்தனர்.

கலியநாயனார் சரித்திரம்—இவர் திருவொற்றியூரிலே, செக்கார் குலத்திலே திருவவதாரஞ் செய்தவர், இவர் பெருஞ்செல்வராகி, செல்வ நிலையாமையையும் யாக்கை நிலையாமையையும் உணர்ந்து, தாம்பெற்ற செல்வத்தாலும் சரீரத்தாலும் பெறவேண்டிய பயன் சிவபுண்ணியஞ் செய்தலே எனத் தெளிந்து, அந்தத் திருப்பதியிலுள்ள சிவாலயத்தின் உள்ளும் புறம்பும் அல்லும்பகலும் எண்ணிறந்த திருவிளக்கு ஏற்றுவாராயினர். நிரந்தரமாக நினையுமடியார் இரந்துண்டு தன்கழல் எட்டச்செய்யும் சிவபெருமான் நெடுங்காலம் இத்திருத்தொண்டைச் செய்துவரும் இவருடைய உழுவலன்பை உலகினரறிந்து உய்யும்பொருட்டு இவருடைய செல்வமெல்லாம் குன்றும்படி அருள்செய்தார். இவர் தாம் வறுமையெய்தியும், தமது மரபிலுள்ளோர் தரும் எண்ணெயை வாங்கிக் கூறிவிற்றுக்கொணர்ந்து, கூலிபெற்று, தாம்மேற்கொண்ட திருத்தொண்டை வழுவாது செய்தார். சிலநாளாயினபின் அவர்கள்

கொடாதொழிய, இவர் மனம்தளர்ந்து, எண்ணெயாட்டும் இடத்திற் சென்று, தொழில்செய்து கூலிவாங்கி, திருவிளக்கிட்டார். ஒருநாள் இவரிடம் தொழில்செய்வித்துக்கொண்டு கூலிகொடுப்பாருங் கிடைக்காமையால் மிகவுங் கவலைகொண்டு, தம்முடைய கற்பிற்சிறந்த காதலியாரை விற்பதற்கு நகரெங்குஞ் சுற்றித்திரிந்து வாங்குவாரின்மையால் பின்னும் மனந்தளர்ந்து, ஆலயத்தையடைந்து. திருவிளக்கேற்றுஞ் சமயத்திலே, "திருவிளக்குப்பணி கெடுமாயின் உயிர்விடுவேன்" என்று துணிவுகொண்டு, திரியிட்ட அகல்களைப்பரப்பி, எண்ணெய்க்குப் பிரதியாகத் தமது உதிரத்தை நிறைக்கும்பொருட்டு ஆயுதத்தினாலே கழுத்தை அரிந்தார். அப்பொழுது கிருபாசமுத்திரமாகிய சிவபெருமானார் நேர்வந்து, இவருடைய திருக்கரத்தைப்பிடித்து, இவருக்கு முன்னே இடபாரூடராய்த்தோன்றியருள, இவர் தாம்பெற்ற ஊறு நீங்கி, சிரசின்மேல் அஞ்சலி செய்துகொண்டு நின்றார். சிவபெருமான் இவரைத் தமது சிவலோகத்தில் வீற்றிருக்குமாறு அருள்புரிந்தனர்.

கணம்புல்லநாயனார் கலியநாயனார்முதலிய நாயன்மார்களை இப்போது யாவரும் வணங்குகிறார்கள். அவர்கள் காலத்தில் அவர்களுக்கு ஒருவரும் உதவிசெய்வாரின்மையால், அவர்கள் திருவிளக்கேற்றவுஞ் சத்தியற்றவர்களாய் இருந்தார்கள். அவர்கள் சரித்திரங்கள் பெரியபுராணத்தில் வந்தமையால் இப்போது அவர்களை யாவரும் வணங்குகிறார்கள். அவர்கள் இப்போதும் இருப்பார்களானால் அவர்களை யாரும்மதிக்கமாட்டார்கள். பித்தம் பிடித்தவர்கள் என்றும் வேலையற்றவர்கள் என்றும் பிழைக்கமாட்டாதவர்களென்றும் சொல்லியிகழ்வார்கள். எவ்வளவு பத்தியுடையவர்களாயிருந்தாலும் உயிரோடிருக்கும் அளவில் அவர்களைச் சனங்கள் பூசிப்பதில்லை. ஒருவன் பாமதுட்டனாயிருந்தாலும் அவனுக்கொரு கோயில்கட்டி திருவிழாநடத்தினால் அவனைப் பலரும் வணங்குவார்கள். இதனை யுணர்ந்தே வஞ்சவொழுக்கமுடையாரும் தங்களைப் பிற்காலத்தவர் பூசிக்கவிரும்பித் தாம் உயிரோடிருக்கும்போதே தங்கள் சரித்திரங்களைப் புளுகி யெழுதிவைத்து, தாங்கள் இறந்த பிறகு சமாதி கட்டிப் பூசித்தற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொள்ளுகிறார்கள்.

சுந்தரமூர்த்திநாயனார் திருத்தொண்டத்தொகை திருவாய்மலர்ந்தருளியதும், சேக்கிழார்சுவாமிகள் திருத்தொண்டர்புராணஞ் செய்தருளியதும் முத்தியடைந்த நாயன்மார்களுக்கு தீவட்டி மத்தாப்பு வாண வேடிக்கைகளோடு திருவிழா செய்வித்தற்கன்று. அவர்கள் மாதிரியைப் பின்பற்றி சைவரெனப்படுவோரியாவரும் சிவனடியார்களைப் பூசித்தற்கேயாம். ஆதலால் சிவபத்தராயிருக்க விரும்பும் ஒவ்வொருவரும் சைவா

நுட்டானமுடைய சிவனடியார்களை மனிதரெனக்கருதாது சிவபெருமானெனவெண்ணி வழிபடுதல்வேண்டும். அப்படி வழிபாடுசெய்யாதபோது அறுபத்துமூன்றுநாயன்மார் வழிபாடும் சிவவழிபாடும் யாதொருப்யனையுஞ் செய்யாது. உயிரோடிருக்கும் சிவனடியார்களை வெறுத்து முத்தியடைந்த நாயன்மார்களைப் பூசித்தல் உயிரோடிருக்கும் தாய்தந்தையரைப் பூசியாது கைவிட்டுப் பிறகு பிதிர்களுக்குச் சிராத்தஞ்செய்வதுபோலாம்.

ஒருவன் சிவவேடமும் சைவாநுட்டானமு முடையவனுகக்காணப் படுகிறுன்; ஆனுல் அவனிடத்தில் பல தீய வொழுக்கங்கள் நிரம்பியிருக்கின்றன; அவனை யெவ்வாறு சிவனடியார் என்று வணங்க மனம்வரும் என்னும் கடா நிகழும். வஞ்ச வொழுக்கமுடையவரை வணங்கும்படி எந்த நூலும் விதிக்கவில்லை. சிவவேடமுடையாரைக் கண்டமாத்திரத்திலேயே அவர்குணங் குற்றங்களை யாராயாமல் அவர்களைச் சிவனெனவே மதித்து வழிபடுவோருள்ளத்தைச் சிவபெருமான் கோயிலாக்கொண்டெழுந்தருளுவர் என்று நூல்கள் கூறுகின்றன. "எவரேனுந் தாமாக" என்னும் முதலையுடைய திருத்தாண்டகமும் இவ்வுண்மையையே போதிக்கும். இதனுல் சிவபத்தி முதிர்ந்தவர்களுக்குச் சிவவேடம் ஒன்றே பொருளாகத்தோன்று மென்பதும், வஞ்சவொழுக்கங்கள் தோன்றுவென்பதும் விளக்கியவாறும். மனிதர்கள் தங்கள் மனைவி மக்களிடத்தில் எவ்வளவு குற்றமிருந்தாலும், அவர்களால் தங்களுக்கு எவ்வளவு கஷ்டநஷ்டமுண்டானுலும், அவைகளால் சலிப்புண்டாகாமல், எவ்வளவுபாடுபட்டாயினும் அவர்களுக்குப் பொருள்தேடி வைத்துக் காப்பாற்றுகிறுர்கள். இதற்குக் காரணம் இவர்கள் தங்கள் மனைவிமக்கள்மீதுவைத்த அன்பேயன்றே? அதில் ஆயிரத்தொரு கூறேனும் சிவனடியார்களிடத்தில் இருந்தால் சைவர்களியாவரும் ஒருவரையொருவர் தெய்வமாக வணங்கி உய்யலாமே. சைவசமயம் தழைத்தோங்குமே. சிலர் அறுபத்துமூன்றுநாயன்மார்களைப்போல் சிவனடியார் பத்தி செய்ய எல்லாருக்கும் இயலுமா என்பார்கள். அவர்களைப்போலவே எல்லோருக்கும் பத்திமையுண்டாகாதென்பது உண்மையே. ஆதலால், அவர்களைப்போல் சிவனடியார்களுக்கு மனைவியைக்கொடுக்கவும், பிள்ளைக்கறி சமைத்து உண்பிக்கவும், இயலாமலிருந்தாலிருக்கலாம். அத்தகைய வன்றொண்டுகளைச் செய்யும்படி ஒருவரும் விரும்பார். அவரவர்கள் தங்கள் தங்களாலியன்றவரையில் சிவனடியார் பூசைசெய்யலாமே; அவர்களுக்குண்டானபத்தி தமக்கு உண்டாகவில்லையேயென்று உண்மையாய் ஏங்கியழலாமே!

## திருக்குறள்.

அன்பிலா ரெல்லாந் தமக்குரியரன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு.

## திருவாசகம்.

யானேபொய் யென்னெஞ்சும்பொய் யென்னன்பும்பொய்
ஆனால்வினையே னழுதாலுன்னைப் பெறலாமே
தேனேயமுதே கரும்பின் றெளிவேதித்திக்கு
மானேயருளா யடியேனுனை வந்துறுமாறே.

சிவபத்தியுடையவர்கள் பிறரைப்போல் பொருள்சம்பாதிப்பதிலே யே காலஞ்செலுத்தாமல், சிவபூசை, சிவாலயவழிபாடு, சைவபரிபால னம், சிவனடியார்பூசைமுதலிய சிவபுண்ணியங்களைச் செய்வதிலே காலங்கழித்தலால், அவர்கள் பெரும்பாலும் ஏழைகளாகவே யிருப் பார்கள். அவர்கள் ஏழைகளாயிருப்பினும், ஈசன் பல்கணத்தெண்ணப் பட்டு இறுமாந்திருக்கும் அருட்பெருஞ்செல்வர்களாகையால், சிவபத் தியில்லாதவர்கள் எவ்வளவு செல்வராயிருப்பினும் அவர்களை மதிப்ப தில்லை.

## கைலைபாதி காளத்திபாதியந்தாதி.

உலகமனைத்தினுக்கு மொண்ணுதன்மேலிட்ட
திலகமெனப் பெறினுஞ்சீசீ—யிலகியசீ
ரீசாதிருக்கயிலை யெம்பெருமானென்றென்றே
பேசாதிருப்பார் பிறப்பு.

## திருத்தாண்டகம்.

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
  தரணியொடு வானாளத் தருவ ரேனு
மங்குவா ரவர்செல்வ மதிப்போ மல்லோ
  மாதேவர்க் கேகாந்த ரல்லா ராகில்
அங்கமெல்லாங் குறைந்தழுகு தொழுநோயரா
  யாவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனுங்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பரா கி லவர்கண்டீர்
  நாம்வணங்குங் கடவுளாரே.

சிவனடியார்கள் ஏழைகளாயிருத்தலாலும், அவர்களுக்கு உலக நடை வெறுப்பாயிருத்தலாலும், அவர்கள் சிவபத்தியில்லாதவர்களை மதியாமையாலும், உலகவர்க்கு அவர்கள் விரோதிகளாகக் காணப்படு வார்கள். ஆதலால் உலகவர் அவர்களை நிந்தித்து நிரயத்தில் வீழ்தலும் உண்டு.

## திருமந்திரம்.

ஆண்டானடியவ ரார்க்கும் விரோதிகள்
ஆண்டானடியவ ரையமேற் றுண்பவர்
ஆண்டானடியாரை வேண்டாது பேசினோர்
தாந்தாம்வீழ்வது தாழ்வா நரகமே.

சைவர்கள் வேதசிவாகமங்களில் இன்றியமையாது வேண்டப்படும் சர்வோத்கர்ஷமாகிய சிவனடியார் பூசையைக் கைவிட்டிருப்பதனால் சைவசமயம் நிலைகுலைந்துவிட்டது. நமது சைவராஜாங்கம் குன்றிவிட்டது. புறச்சமயங்களெல்லாம் நமது சைவநாட்டைச் சூழ்ந்து ஆரவாரஞ்செய்கின்றன. ஆதலால் சிவநேயச் செல்வர்களே, இனிவாளா விராதீர்கள். ஒருவரையொருவர் சிவமாகப்பாவித்துப் பூசித்து ஒற்றுமையோடு சைவராஜாங்கத்தை நிலைநிறுத்துங்கள்.

## திருப்படையெழுச்சி.

தொண்டர்காளேசெல்லீர் பத்தர்காள் சூழப்போகீ
ரொண்டிறல் யோகிகளே பேரணி யுந்தீர்க
டிண்டிறற் சித்தர்களே கடைக்கூழை சென்மி
னண்டர் நாடாள்வோநா மல்லற்படை வாராமே.

---

## அநுட்டானசந்தேக வினாவிற்கு விடை.

சைவம் 5-ம் இதழில் ஒரு "சந்தேகி" என்பார் நிகழ்த்திய வினாவை யான் கண்ணுற்றேன். ஆசமனம் தத்துவ சுத்திகாரணமாகச் செய்யப்பெறுவது. ஒரு பாத்திரத்திலே உள்ள தீர்த்தத்தைப் பஞ்சபாத்திரத்திற் பிரித்துவிட்டு உத்தரணியால் மொண்டு ஆசமித்தல் உத்தமம். பாத்திரம். கிடையாதவிடத்துப் பஞ்சபாத்திரத்திலே உள்ள ஜலத்தை உத்தரணியால் எடுத்து ஆசமனஞ்செய்யலாம். இவ்வாறன்றிப் பஞ்சபாத்திரமொன்றே யகப்படின் அதிலிருந்து சிறிது சிறிதாக எடுத்து ஆசமனஞ்செய்தபின், அப்பாத்திரத்துச் சேஷ நீரில் அற்பம் பூமியில் கொட்டினால் ஆசமனம் செய்ததோஷம் நீங்கும். ஆகவே, ஆசமனநீர் குற்றமடையாமை தெளிக. ஆசமனம் நின்றுகொண்டு செய்தல் கூடாது. இன்னும், ஆசமன சம்பந்தமானவைகளை வைத்யநாத தீக்ஷிதீயம் ஆசாரகாண்டத்துப் பாரக்கக்கண்டுங் கேட்டும் அன்பர் சந்தேகத்தை நிவிர்த்திசெய்துகொள்ளுவது நலம்.

இங்ஙனம்
ஒரு வித்தியார்த்தி
ஞானப்பிரகாசகலாசாலை
புதுவயல்.

### ஸ்ரீ தாயுமானசுவாமிகள்பாடல்.

தேன்முகம் பிலிற்றும் பைந்தாட் செய்யபங் கயத்தின் மேவும்
நான்முகத் தேவே நின்னு ளூட்டிய வகில மாயை
கான்முயற் கொம்பே யென்கோ கானலம் புனலே யென்கோ
வான்முக முளரி யென்கோ மற்றென்கோ விளம்பல்வேண்டும்.

(இ–ள்.) பசியநாளத்தையுடைய தேனைச்சொரியும் செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் நான்கு திருமுகங்களையுடைய கடவுளே, உம்மால் சிருட்டிக்கப்பட்ட இந்த மாயப்பிரபஞ்சத்தை, காட்டில் வாழ்கின்ற முயற்கொம்பு என்று சொல்வேனு? கானற்சலமென்று சொல்வேனு? ஆகாயத்தாமரையென்று சொல்வேனு? வேறென் னென்று சொல்வேன், இதனை நீர் எனக்கு விளங்கச்சொல்லவேண்டும். (எ-று.)

இப்பிரபஞ்சத்தை முயற்கோடு முதலியவைபோலப் பொய்யென்று சொல்வதா அல்லது மெய்யென்றுசொல்வதா எனில் பொய்யல்ல மெய்யாகுமென்பதாம். வேதாந்த மயக்குடையார் முயற்கொம்பு முதலியனபோல் பிரபஞ்சத்தைப் பொய்யென்று சொல்லுவதன்றி வேறென்சொல்வது என்று கூறுவர். அஃதுபொருந்தாது. முயற்கொம்பு இல்லாதது, அது போலும் பிரபஞ்சம் இல்லாததாயின் பிரம்மா சிருட்டித்தா ரென்றதும் திருமால் காத்தா ரென்றதும் என்னை? இல்லாததைப் படைத்தார் புரந்தா ரென்றால் முயலிடத்து இல்லாத கொம்பை ஒருவன் கண்டு பன்னிரண்டு முழமென்றான், மற்றொருவன் அதற்குப் பூண் கட்டினான் என்று கூறுவதோடொக்கும்.

வேறென்னை, யெனின் சங்கார கர்த்தாவால் சர்வசங்காரகாலத்து உலகம் சங்கரிக்கப்படுங்கால், சிலபொருளிருக்கும், சிலபொருளழியும், திருமால் பிரமனிருப்பர் ஏனையோரழிவர், என்பதின்றி முயற்கொம்பு முதலிய இல்பொருளுவமைபோல் யாவுஞ் சூனியமாய்ப் போமென்பதே அதன் கருத்தாகும்.

வேண்டுவ படைத்தாய் நுந்தை விதிப்படி புரந்தா னத்தைக்
காண்டக வழித்தான் முக்கட் கடவுடா னினைய வாற்றால்
ஆண்டவ னெவனே வென்ன வறிகிலா் தகில நீயே
ஈண்டிய வல்ல நீர வெம்மனோர்க் கியம்பு கண்டாய்.

(இ–ள்.) (பிரமதேவரே நீர்) ஆன்மாக்களிச்சையின்வழி வேண்டிய தனுகரண முதலியவற்றைச் சிருட்டித்தீர். (அவற்றை) உமது தந்தையாகிய திருமால் காத்தனர். (அவரால் காக்கப்பட்ட அப்பிரவஞ்சத்தை) முக்கண்ணையுடைய இறைவர் யாவருங்காண அழித்தனர். இம்முறை

யால் (மூவரென்றெண்ணப்பட்டவருள்.) உலகிற்குக் கர்த்தாவாவார் யாவரென்று ஆன்மாக்களறியார்கள், (ஆகையால்) இப்பொழுதுண்டாகிய சந்தேகமொழிய எம்மையொத்தவர்களுக்கு நீரே சொல்லவேண்டும்.(எ-று.)

கண்டன வல்ல வன்றே கழித்திடு மிறுதிக் கண்ணே
கொண்டது பரமா நந்தக் கோதிலா முத்தி யத்தாற்
பண்டையிற் படைப்புங் காப்பும் பறந்தன மாயையோடே
வெண்டலை விழிகை காலில் விளங்கிட நின்றான் யாவன்.

(இ-ள்.) (வேதம்) காணப்படுவனவாகிய பொருள்களெல்லாம் இன்பம் தருவனவல்லவென்று கழித்துவிடும். (அங்ஙனம் கழித்துச் சென்ற) முடிவிடத்தில் (வேதாந்தத்தில்) கொண்டது குற்றமற்ற பரமானந்த சொரூபமாகிய முத்தியாகும். அக்காரணத்தால் சங்காரகாலத்தில் சிருட்டியும் திதியும் (அத்தொழிலைச் செய்கின்ற பிரமவிஷ்ணுக்களோடு) மாயையோடொழிந்தன. இவ்விருவருமொழியநின்ற அக்காலத்தில் வெண்மையாகிய தலையும், விழியும், (முறையே) காத்திலும் பாதத்திலும் பிரகாசிக்கும்படி நின்றவன் யாவன். இவ்வுண்மையைக் கூறுவீர் பிரமதேவரே.

மேலைச் செய்யுளில் ஆண்டவனெவனோ வென்றதை இச்செய்யுளில் சங்காரகருத்தாவேயென்று சித்தாந்தப்படுத்தியதாகும். எங்ஙனமெனின் வேதம் மாயாகாரியமாகிய பிரபஞ்ச பேதங்களெல்லாம் கூறி அவற்றைப் பந்தமென்று கழித்து, கொண்டது முத்தி. அக்காலத்தில் படைப்புங் காப்புமுண்டெனில் சங்காரமென்பது யாது? ஆகையால் படைப்பும் காப்பும் பறந்தன எனவும், இவ்விருதொழிலையுமுடைய பிரபஞ்சத்திற்கு மூலம் மாயையாகலின் மாயையே பிரபஞ்சத்தைக் காரியப்படுத்துமென்று கூறப்படும். அம்மாயை சிவசத்தி இயக்க இயங்குதலும் அஃதில்வழி அச்சத்தியிலொடுங்கிச் செயலற்றிருப்பதுமாதலால் படைப்பும் காப்பும் பறந்தன என்னுது மாயையோடே பறந்தன எனவும், படைத்தல் காத்தலைத் தனது சங்காரத்தொழிலிலும், மாயையைத் தனது சத்தியிலும் அடக்கிக்கொள்வதுபோல் பிரமனையும் திருமாலையும் தனது திருமேனியி லொடுக்கிக்கொள்வதும் இயல்பாதலால் வெண்டலைவிழிகைகாலில் விளங்கிட எனவும், பிரபஞ்சமும் மாயையும் கடவுளரும் இவ்வாறொடுங்க ஒடுங்காதுநின்றவன் சங்காரகருத்தாவேயென் றுணர்த்தலால் நின்றான் யாவனெனவுங் கூறினார்.

வைதிகசைவசித்தாந்தப்பிரசங்கரத்னாகரம்
கா. ஆலாலசுந்தரம்பிள்ளை.